REGD. No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: கார்த்திகை 27உ செவ்வாய் (13—12—55) ★ ★ வெளியீடு: கார்த்திகை 28உ புதன் (14—12—55) [இதழ் 155

பஜனை பாடி சகாக்களைத் தப்புவித்த சிறைக் கைதிகள்!

ஷிமோகா, டிச. 10—

சிகாரிபூர் எல்லை கொள்ளை வழக்கு சம்பந்தமாகக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஐந்து கைதிகள் சாகர் சிறையிலிருந்து ஜன்னல் கதவுகளைப் பெயர்த்துத் தப்பித்துவிட்டனர் என்று தெரிய வருகிறது.

இந்தக் கைதிகள் ஜன்னல் கம்பிகளைப் பெயர்க்கும்போது, இதர கைதிகள் பஜனைப் பாடல்கள் சிலவற்றைப் பாடினராம்.

(4-ம் பக்கம் பார்க்க)

மற்ற 'தேசீய' மொழிகளை வளர்க்கும் முயற்சி இந்தியாவை சீரழித்து விடுமாம்!

தாய்மொழிகளின் இடத்தை இந்திக்கு அளிக்க வேண்டுமாம்!

ஆட்சி மொழி என்ற பெயர் மாறி தேசீய மொழியாக இந்தி பேருருக்கொள்ளுகிறது!

ஆரியக் கலாச்சாரப் பாதுகாவலர் முன்ஷியின் முகாரி!

அலகாபாத், டிச. 11—

"இந்தியாவின் பெருமையும், அதன் கலாச்சாரப் புது இணைப்பும், எதிர்காலத்தில் இந்தி மொழி ஒரு தேசீய மொழியாக வளருவதைப் பொறுத்துத்தான் இருக்கிறது.

'இந்தி வளருவதற்கு, இந்தியா முழுமையிலும் இந்தி மொழியே உயர்தரக் கல்வி போதிக்கும் போதனா மொழியாக ஏற்றுக் கோள்ளப்பட வேண்டும்.

"இப்படிச் செய்யப்படாவிட்டால், இந்தியாவின் ஒற்றுமைக்கு ஆபத்து ஏற்படும்; மொழி வெறி தொடர்ந்து தலைதூக்கிக்கொண்டிருக்கும்.

"உயர்தரக் கல்வி தருவதற்கென பல மொழிகளைப் போதனா மொழிகளாக வளர்ப்பதில் நமது ஆற்றல்கள் அனைத்தையும் வீணாக்குவோமானால், முடிவில் நாம் எந்த ஒரு மொழியையும் முன்னேற்ற முடியாது போய்விடும்; அதிலும் ஒரு 'ராஷ்டிர பாஷை'யை வளர்க்க முடியாது போய்விடும்,"

என்று, உத்தரப் பிரதேச கவர்னரான கே. எம். முன்ஷி இங்குள்ள இந்தி சாகித்திய சம்மேளனத்தின் பட்டமளிப்பு விழாவில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவர் மேலும் குறிப்பிட்டிருக்கிறார்:—

"சில இந்தி வெறியர்கள், சுவமொழிப் படிப்பைக் கூடாது என்கிறார்கள். அப்படிக் கூறுவது தற்கொலைக்கொப்பாகும். சுவமொழியிலிருந்து பெரும் பகுதியை கிரகித்துக் கொள்ளாவிட்டால், இந்தி ஒரு 'ராஷ்டிர பாஷை'யாக விளங்க முடியாது."

மாறுதல் இல்லையாம்!

சென்னை, டிச. 13—

கடந்த நவ. 26-ந் தேதியுடன் முடிவடைந்த வாரத்தில், சென்னை நகரில் தொழிலாளர் வாழ்க்கைத் தரப்புள்ளியில் மாறுதல் எதுமில்லாமல் 236-ஆக இருந்தது.

'சீட்டோ' மந்திரிகள் மாநாடு

பாகிஸ்தானில் நடைபெறுமாம்

கராச்சி, டிச. 12—

தென் கிழக்கு ஆசிய ஒப்பந்த நிறுவனத்(சீட்டோ)தின் மந்திரிகள், வரும் 1956 மார்ச் [illegible] பாகிஸ்தானில் கூடுவர் என்று தெரியவருகிறது.

உறுதிமொழி தந்த குடியரசுத் தலைவர் உத்தரவு பிறப்பிக்கிறார்!

இந்தி மொழியில் அரசாங்க அலுவல்களாம்!

புதுடில்லி, டிச. 12—

இந்தியக் குடியரசுத் தலைவர், இந்திய சர்க்காரின் அலுவல்களுக்கு இந்தியைப் பயன்படுத்துவது சம்மந்தமாக அரசியல் சட்டத்தின் 343 (2) பிரிவின் கீழ் ஓர் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்; அதன் நகல், ராஜ்யங்கள் [illegible] சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொது மக்களுடன் [illegible] போக்கு - வரத்து, [illegible] அறிக்கைகள், மக்கள் [illegible] கான அறிக்கைகள், [illegible] பது, சர்க்கார் தீர்மானங்கள், சட்டங்கள், இந்தியை ஆட்சி மொழியாகக் கொண்டுள்ள மாநில சர்க்கார்களுடன் கடிதப் போக்கு-வரத்து, ஒப்பந்தங்கள், இந்தியாவின் வெளிநாட்டு அதிகாரிகள்—தூதுவர்கள், சர்வதேச நிறுவனங்கள், இந்தியாவிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்களுக்கும், சர்வதேச நிறுவனங்களுக்கும் அனுப்பப்படும் 'குறிப்பேடு'கள் ஆகியவற்றிற்கு, ஆங்கிலத்துடன் இந்தியையும் உபயோகிப்பதற்கு இந்த உத்தரவு வசதி செய்கிறது.

புத்த சந்நியாசிகளின் சிங்கள மொழி வெறி!

போராட்டம் நடத்தப்போவதாக மிரட்டல்

கொழும்பு, டிச. 12—

வரும் ஜனவரி 15-ந் தேதிக்குள் ஆளும் கட்சியான ஐக்கிய தேசிய கட்சியின் தனி மாநாடு கூட்டப்பட்டு, 'சிங்களம் மட்டுமே இலங்கையின் ஆட்சி மொழி' என்ற முடிவு மேற்கொள்ளப்படவில்லையானால், புத்தசன்னியாசிகள் ஒரு பெரும் கிளர்ச்சி நடத்தப் போவதாக மிரட்டியிருக்கின்றனர்.

சுமார் 5000 உறுப்பினர்கள் கொண்ட 24 நிறுவனங்களைச் சேர்ந்தவர்கள் என்று தங்களைக் கூறிக்கொள்ளும் சுமார் 100 புத்த பிட்சுக்கள், இப்படி ஒரு தீர்மானம் நிறைவேற்றியிருக்கின்றனராம்.

இந்த போராட்டம் நடத்துவதற்காக அவர்கள் ஒரு குழுவும் நியமித்திருக்கிறார்களாம்.

ஐக்கிய ஆசிய பிட்சுக்கள் கவுன்சிலின் தலைவரான ஒரு பிட்சு கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளதாவது:

"இப்போது போன்று வேறெப்போதும்—கடந்த 2,500 ஆண்டுக் காலத்தில் சிங்கள இனத்தவர் ஒரு பெரும் நெருக்கடியைச் சந்தித்ததில்லை. பழங்காலத்தைப் போலவே இப்போதும் சுமார் 25,000 பிட்சுக்கள்வரை போராட்டத்திற்காக அணி திரள தயாராக இருக்கின்றனர்.

"இலங்கையின் சரித்திரத்தில் பிட்சுக்கள்தான், சட்டகர்த்தாக்கள்; அரசுகளை ஆக்குவோர்; ஆகவே, கொத்தலாவலைக்கு 'தீர்ப்பு நாள்' நெருங்கிவிட்டது என்று எச்சரிக்க விரும்புகிறேன்."

கொத்தலாவலை வேறு ஒரு கூட்டத்தில் பேசுகையில், "நான் மொழியையும், மதத்தையும் காப்பாற்ற உறுதி பூண்டிருக்கிறேன்; புத்த மதத்தவர்கள் பாதுகாப்பளிக்கப்படுவர்; ஆனால், இந்த நாட்டில் வாழும் இதரரையும் மதிக்க வேண்டுவது அவசியம்" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இந்தியா வந்துள்ள ரஷ்ய நிபுணர் குழுவினர் அசாம் எண்ணெய் வயல் பகுதியை ஆறு நாட்களுக்குச் சுற்றிப்பார்ப்பர்.

பெல்லாரி கிளர்ச்சி: 1,144 பேர் கைது

ஹோஸ்பெட், டிச. 10—

'பெல்லாரி கர்நாடகத்துடனேயே இருக்கவேண்டும்; ஆந்திராவிற்கு மாற்றப்படக் கூடாது,' என்று கோரி நடைபெற்று வரும் கிளர்ச்சியை ஒட்டி இதுவரை 1,144 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இன்று நடைபெற்றக் கிளர்ச்சியின்போது 13 தொண்டர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்தக் கிளர்ச்சியை அகண்ட கர்நாடக ராஜ்ய நிர்மாண பரிஷத் நடத்தி வருவது தெரிந்ததே.

இன்று கிளர்ச்சிக்காரர்கள், துங்கபத்திரா அணைக்கட்டு 'போர்டி'ன் நிர்வாகத்திலிருந்து வரும் துங்கபத்திரா கீழ் அணைக் கால்வாயிலிருந்து பானைகளில் தண்ணீரை மொண்டு வந்து கர்நாடக எல்லைப் பகுதிக்குள் பாய்ச்சிய போது கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

1955 ஏப்ரலிலிருந்து அக்டோபர் 31-ந் தேதி வரையில் மொத்தம் 795 இளைஞர் முகாம்கள் நடத்தப்பட்டுள்ளன. 1954–55ம் ஆண்டில் நடத்தப்பட்ட முகாம்களின் எண்ணிக்கை 447 ஆகும். இம்முகாம்களை நடத்துவதற்காக, மத்திய சர்க்கார், 1955-ல் அக்டோபர் 31-ந் தேதி வரை மொத்தம் ரூ. 44,96,528 வழங்கியிருக்கின்றனர்.

'பார்ப்பனனாய்ப் பிறந்தும் பிச்சை எடுப்பதை எதிர்க்கிறேன்'

டி. டி. கிருஷ்ணமாச்சாரி வீராப்பு

கல்கத்தா, டிச. 12—

"நான் பிறப்பிலேயே பார்ப்பனன்—பிச்சைக்காரன்; என்றாலும் பிச்சை எடுப்பதை நான் வெறுக்கிறேன்.

"நாங்கள் இந்தத் திட்டத்தைத் தயாரித்திருக்கிறோம்—நிறைவேற்ற விரும்புகிறோம்—நீங்கள் கொஞ்சம் தயவு செய்து உதவுவீர்களா?—என்று வெளி நாட்டவரிடம் யாசகம் கேட்க எனது சகாக்களில் எவரையும் அனுமதிக்கவும் நான் விரும்பவில்லை.

"இரண்டாம் திட்டத்தை அமல் செய்ய வெளிநாட்டவர் உதவி கோருவதை நான் தனிப்பட்ட முறையில் எதிர்ப்பவனாயிருக்கிறேன்.

"நாமாகச் சென்று 'உதவி தாருங்கள்' என்று நாம் கேட்க மாட்டோம்; ஏனெனில், யார் நமக்கு உதவி தருகிறார்களோ, அவர்கள் நிபந்தனைகள் விதிப்பார்கள் என்பதும் நமக்குத் தெரியும்,"

—என்று இந்தியப் பேரரசின் வர்த்தகத் தொழில் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி, வர்த்தகக் கழகங்களின் கூட்டுச் சங்கக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

★

வெளிநாட்டு மூலதனம்

உறுதிமொழியை நினைவூட்டுகிறார் டி. டி. கிருஷ்ணமாச்சாரி

டி. டி. கே. மேலும் குறிப்பிட்டதாவது:—

"இந்திய அரசியல் சட்டம் 31வது விதிக்கு செய்யப்பட்டுள்ள திருத்தத்தின் விளைவாக தங்கள் முதலீட்டிற்கு ஏதேனும் ஆபத்து ஏற்படும் என வெளிநாட்டு மூலதனக்காரர்கள் அச்சமுறத் தேவை இல்லை என்ற உறுதியை மீண்டும் கூறவிரும்புகிறேன்; அந்த உறுதி மொழிநிலைத்து நிற்கக் கூடியதாகும்.

"இரண்டாம் திட்டத்தினை நிறைவேற்றுவதற்கு, வெளிநாட்டு மூலதனம் பெரும் உதவி செய்ய முடியும் என்பதை நான் உணருகிறேன்; ஆனால், அதே நேரத்தில் அதுவே மிக முக்கியமானது என்பதல்ல-உள்நாட்டிலிருந்துதான் பெரும் பகுதி மூலதனம் திரட்டப்பட வேண்டும்.

"சுதந்திரம் பெறுவதற்காக நாங்கள் (!) நடத்திய போராட்டங்கள் இன்னும் நினைவிலிருக்கின்றன. அந்தச் சுதந்திரத்திற்கு ஒரு சிறிதும் ஊறு தேடும் வகையில் பேரம் பேசுவதை நாங்கள் அனுமதிக்க மாட்டோம்."

திட்டத்திற்குப் பணம் சேகரிக்க!

நிதிஅமைச்சர் கூறும் வழி

புதுடில்லி, டிச. 12—

வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களாகப் போட்டியிட விரும்புவோருக்கு ஒரு தகுதி நிர்ணயம் செய்யும் குறிப்பொன்றை நிதியமைச்சர் தேஷ்முக் வழங்கியிருப்பதாகத் தெரிய வருகிறது.

இதனால், இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப் பணம் சேரவும் வழி ஏற்படும் என்று அவர் கருதுகிறாராம்.

எவர் தனது தொகுதியில் சிறுசேமிப்பு இயக்கத்திற்கு அதிகமான வெற்றி தேடித் தருகிறாரோ அவருக்குத்தான், காங்கிரஸ் 'டிக்கெட்' தருவது என்று நிர்ணயம் செய்தால், திட்டத்திற்குப் பணம் சேர முடியும் என்று நிதி மந்திரி கருதுகிறாராம்!

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 13-12-'55 செவ்வாய்

கைராட்டினத் தகராறு!

'கைராட்டினமும், கதருமே எங்கள் போர்க் கருவிகள்' என்று விடுதலைப் போராட்டக் காலத்தில் பேசிவந்த காங்கிரசார், இன்று, ஒருவகைக் கைராட்டினம் கிளப்பியுள்ள சிக்கலில் சிக்கித் தவிக்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

'இந்தியத் துணைக்கண்டத்து மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தவும், எல்லோருக்கும் வேலையும், வருமானமும் அதன் மூலம் வாழ்வும் தேடித் தருவதற்குந்தான் இது' என்று கூறி, காங்கிரஸ் ஆளவந்தார்கள், திட்டங்கள் பல தீட்டி நிறைவேற்றி வருகிறார்கள்.

அவற்றுள் ஒன்று, முதல் ஐந்தாண்டுத் திட்டம்; இப்போது இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது — இன்னும் முழு உருவம் பெறவில்லை.

'இந்த இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கம், இந்தியாவில் பெருகிவரும் வேலையில்லாக் கொடுமையை ஒழிப்பதுதான்,' என்று, திட்டத்தின் கர்த்தாக்கள் முழக்கி வந்திருக்கின்றனர்—வருகின்றனர்!

'அந்த நோக்கத்திற்கு ஒப்பவே திட்டம் உருப்பெறும்' என்றும் கூறிவருகின்றனர்.

'பல கோடி மக்கள் வேலை இல்லாதிருப்பதால் அவர்கள் அனைவருக்கும் வேலை தருவதற்குக் குடிசைத் தொழில்கள், சிறு தொழில்கள் ஆகியவற்றை கிராமங்களில் துவக்க வேண்டும்; அதன் மூலம் வேலை இல்லாக் கொடுமையைப் பெருமளவில் குறைத்துவிடலாம்,' என்று திட்டக் குழுவினர் கருதினர். இந்தக் கருத்திற்கிணங்கவே, இந்தியாவுக்கேற்ற கைத்தொழில்கள், சிறு குடிசைத் தொழில்கள் எவை எவை—அவற்றிற்கான மூலதனச் செலவு எவ்வளவு தேவைப்படும்—அவற்றின் உற்பத்திச் சக்தியின் அளவு என்ன—என்பன போன்றவற்றை ஆராய்ந்து கூறுவதற்காக நியமிக்கப்பட்டக் குழுதான், 'கார்வேக் குழு.'

இந்தக் 'கார்வே' குழுவினர், தங்கள் அறிக்கையில் சிபாரிசு செய்துள்ளப் பல்வேறு குடிசைத் தொழில்களுள், 'அம்பர் சர்க்கா' என்ற ஒருவகைக் கைராட்டினத்தைம் பெரும் அளவில் தயாரித்து, அவற்றின் மூலம் கைத்தறிகளுக்குத் தேவையான நூல் உற்பத்திச் செய்ய வேண்டும்—என்பதும் ஒன்றாகும்.

கைராட்டினத்தை நன்கு அபிவிருத்தி செய்து பல மடங்கு உற்பத்திப் பெருக்கமும், நல்ல நூல் தரமும் ஏற்படும் வகையில் உருவாக்கினால் அந்தக் கைராட்டினத்திற்கு ஒரு இலட்சம் ரூபாய் பரிசு வழங்குவதென காந்தியார் ஒரு காலத்தில் அறிவித்திருந்தார்.

இப்படி ஒரு கைராட்டினம் தயாரித்துத் தந்து பரிசு பெறுவதில், பிரிட்டன், ஜெர்மனி போன்ற நாட்டவரில்கூட சிலர் ஈடுபட்டனராம்.

ஆனால், 'கைராட்டினத்தின் உருவாக்கச் செலவு நூறு ரூபாய்க்கு மேல் இருந்தலாகாது' என்ற காந்தியாரின் நிபந்தனைக்கு உட்பட்டவையாயிருக்கவில்லை — பரிசுக்காக வந்த பல கைராட்டினங்கள்!

தமிழ் நாட்டில் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த ஏகாம்பரம் (பிள்ளை) என்ற காந்தி பக்தர் ஒருவர் தயாரித்த கைராட்டினம்தான், வந்திருந்ததில் எல்லாம் சிறப்புடையது எனக் கருதப்பட்டதாம்.

அந்தக் கைராட்டினம்தான், இப்போது காங்கிரசாரைப் பெரும் சிக்கலுக்கு ஆளாக்கி வைத்திருக்கும் 'அம்பர் சர்க்கா'வாகும்.

'25 இலட்சம்! 'அம்பர் சர்க்கா'க்களை உற்பத்தி செய்வதற்காக இரண்டாம் திட்டத்தில் ரூ. 25 கோடி செலவிட வேண்டும்' என்று, அகில இந்தியக் கைத்தறி 'போர்டு' திட்டம் ஒன்றை இந்தியப் பேரரசிடம் தாக்கல் செய்திருக்கின்றது.

'இந்தத் திட்டத்தினால் 50 இலட்சம் மக்களுக்கு வேலை கிடைக்கும்; ஆகவே, இதனை அமுல் செய்ய வேண்டும்' என்று, திட்ட மந்திரி குல்ஜாரிலால் நந்தா, உற்பத்தி மந்திரி கே. சி. ரெட்டி ஆகியோர் வாதிடுகின்றனர். இவர்களை ஆதரிக்க, மக்கள் சபை காங்கிரஸ் கட்சி உறுப்பினர்கள் பலர் இருக்கின்றனர்.

"'அம்பர் சர்க்கா' இன்னும் பரிசோதனை நிலையிலிருக்கும் ஒன்று; இதன் மூலம் உற்பத்தியாகும் நூல், கைத்தறிக்கு உகந்ததாயிருக்கும் என்பதற்கு உத்தரவாதமில்லை. துணி உற்பத்திக்கென இரண்டாம் ஐந்தாண்டுத் திட்டத்தில் நிர்ணயிக்கப்பட்டுள்ள இலட்சிய எல்லையை அடைவதற்கு இந்த 'அம்பர் சர்க்கா'வை நம்பியிருக்க முடியாது. எனவே, 'அம்பர் சர்க்கா' அபிவிருத்தி என்பதற்காக, ஆலைகளின் நூற்புக் கதிர்களை அதிகரிப்பதை நிறுத்தக் கூடாது" என்று வாதிடுகிறார், வர்த்தக, தொழில் துறை அமைச்சர் டி. டி. கிருஷ்ணமாச்சாரி.

"'அம்பர் சர்க்கா'வுக்கு மானிய உதவி தருவது என்றால், இரண்டாம் திட்ட காலத்தில் இந்தியப் பேரரசு ரூ. 80 கோடி செலவிடவேண்டி வரும்; இது நம்மால் ஆகக்கூடியதா என்பதையும் எண்ணிப் பார்த்தாக வேண்டும்" என்று, அபாயச் சங்கு ஊதியிருக்கிறார் நிதி அமைச்சர் தேஷ்முக்.

இப்படி 'அம்பர் சர்க்கா' என்ற கைராட்டினம், காங்கிரசாரிடையேயும், ஆட்சிப் பொறுப்பில் அமர்ந்திருக்கும் நபர்களிடையேயும் பெரும் பிளவை உண்டுபண்ணியிருக்கிறது.

இது குறித்துக் காங்கிரசார் முடிவெடுத்த பின்பு, தங்கள் முடிவுக்கு அவர்கள் தரும் விளக்கத்தையும் அறிந்த பின், பிறிதோர்முறை இந்தக் கைராட்டினத் தகராறு குறித்து எழுதுவோம்.

காஷ்மீர் பற்றிய ரஷ்யத் தலைவர்களின் அறிவிப்பு

பல வட்டாரங்களில் எதிரொலி

இந்தியா, பாகிஸ்தானில் எதிர்ப்பு

காஷ்மீர் பற்றி சோவியத் ரஷ்யத் தலைவர்கள் தெரிவித்தக் கருத்துக்கள், இந்தியா, பாகிஸ்தான், மற்றும் பல மேற்கு நாடுகளில் பெரும் பரபரப்பை ஊட்டியிருக்கின்றன.

'காஷ்மீருக்கு சோவியத் தலைவர்கள் செல்லக்கூடாது,' என்று பாகிஸ்தான் சர்க்கார், கராச்சியில் உள்ள ரஷ்யத் தூதுவரிடம் ஆட்சேபணைக் குறிப்பொன்றைத் தந்திருந்தனர்.

அதனைப் பொருட்படுத்தாது, ரஷ்யத் தலைவர்கள் அங்கு சென்று சுற்றுப் பயணம் மேற்கொண்டனர்.

விமான நிலையத்தில் பேசிய பிரதமர் புல்கானின், 'காஷ்மீர் இந்தியாவின் வடக்குப் பகுதி' என்று குறிப்பிட்டதுடன், 'இந்திய மக்களின் ஒரு பகுதியினராகிய காஷ்மீர் மக்களைச் சந்திக்க வாய்ப்புக் கிடைத்தது குறித்துப் பெரு மகிழ்ச்சி தெரிவித்திருக்கிறார்.

தாங்கள் காஷ்மீருக்குச் செல்லக்கூடாதென பாகிஸ்தான் தந்த ஆட்சேபக் குறிப்புக்குப் பதிலளிக்கும் வகையில் கம்யூனிஸ்டு செயலாளர் நிகிதா குருஷ்சேவ் 'நாங்கள் எங்கு, எதற்காகப் போகிறோம்; நாங்கள் எத்தகையோரை நண்பர்களாக்கிக் கொள்ளப்போகிறோம் என்பதை எங்களுக்கு எவரும் சொல்லத் தேவை இல்லை,' என்று குறிப்பிட்டிருக்கிறா.

"காஷ்மீர் சிக்கல் காஷ்மீர் மக்களால் தீர்க்கப்பட்டுவிட்டது; காஷ்மீர் இந்தியாவின் ஒரு பகுதி என்பதை காஷ்மீர மக்கள் தீர்மானித்துவிட்டார்கள்; 'இந்தியக் குடியரசின் ஒரு பகுதிதான் காஷ்மீர்' என்பது நிர்ணயிக்கப்பட்டுவிட்ட விஷயம்" என்றும் குருஷ்சேவ் குறிப்பிட்டிருக்கிறார்.

பொதுக் கூட்டத்தில் பேசிய அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"பாக்தாத் ஒப்பந்தத்தில் அங்கம் பெறும் நாடுகளை நாங்கள் எப்போதும் ஆதரித்ததில்லை; இனியும் ஒருபோதும் ஆதரிக்கமாட்டோம்; இந்த ஒப்பந்தம், 'சோப்பு நீர்க்குமிழி 'போல மறைந்துவிடும்; விரும்பத் தகாத நினைவுகள் மட்டுமே நிலைநிற்கும்.

"காஷ்மீர் சிக்கல்—என்றழைக்கப்படும் சிக்கல், மக்களிடையே எழவில்லை.

'காலனி ஆதிக்கத்தை உதறி எறியும் மக்களிடை பிளவையும், பகையையும் மூட்டிவிடுவது சில அரசுகளுக்குச் சாதகமானதாயிருந்தது.

"ஆதிக்கவாதிகள், மக்களிடையே பிளவை உண்டுபண்ண தங்களுக்கென்றிருந்த வழிகளைக் கையாண்டிருக்கின்றனர்.

"இந்தியா பிரிக்கப்பட்டதே, ஏகாதிபத்திய வாதிகளின் பிரித்தாளும் கொள்கையின் விளைவுதான்.

"சில நாட்களுக்கு முன்னர், காஷ்மீர் சிக்கல் ஐ. நா. சபையில் விவாதத்திற்கு வந்தபோது, ரஷ்யப் பிரதிநிதி, 'இது காஷ்மீர் மக்களே தீர்த்துக்கொள்ள வேண்டிய விவகாரம்' என்று தெளிவாகக் கூறிவிட்டிருக்கிறார்."

இப்படி ரஷ்யத் தலைவர்கள், காஷ்மீர் விவகாரம் குறித்து அறிவித்துள்ள கருத்துக்கள், பாகிஸ்தான், மேலைநாடுகள் மற்றும் ஐ நா. வட்டாரங்கள் இங்கெல்லாம் மட்டுமின்றி, இந்தியாவிலேயே பெரும் பரபரப்பையும், சலசலப்பையும் மூட்டிவிட்டிருக்கின்றன.

"சுதந்திரமும், மக்களுக்குச் சுயநிர்ணய உரிமையும் வேண்டும் என்று கோரும் எவரும், எல்லோரும், ரஷ்யத் தலைவர்கள் காஷ்மீர் விவகாரம் குறித்துத் தெரிவித்துள்ள கருத்தைக் கேட்டு அதிர்ச்சியுற்றிருப்பர்," என்று பாகிஸ்தான் பிரதமர் சௌத்திரி முகம்மது அலி அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

"காஷ்மீர் இந்தியாவுடனா, பாகிஸ்தானுடனா இணைவது என்பதை வாக்கெடுப்பு மூலமே நிர்ணயிக்க வேண்டும்—காலனி ஆதிக்கம் ஒழிய வேண்டும்—என்று பேசிவருகிற ஐ நா. பாதுகாப்பு சபையில் நிரந்தர இடம் பெற்றிருக்கும் ரஷ்யாவின் தலைவர்கள், காஷ்மீர் விவகாரம் குறித்து அறிவித்துள்ள கருத்துக்கள் அசாதாரணமானவையாகும்.

"காஷ்மீர் மக்கள் இன்னும் தங்கள் சுயநிர்ணய உரிமையை நிலைநாட்டிக்கொள்ள அனுமதிக்கப்படவில்லை; காஷ்மீர் இந்திய இராணுவத்தின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கிறது; வாக்கெடுப்பு இன்னும் நடைபெறவில்லை

"வாக்கெடுப்பு வேண்டும்—என்று கோரும் தலைவர்கள் எல்லாம், ஈவிரக்கமின்றி கொடூரமான அடக்குமுறைக்கு ஆளாக்கப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்—இப்போதுள்ள இந்தியாவின் கைப்பொம்மையாக விளங்கும் ஆட்சியினரால்! இந்திய ஆட்சியினர், தாங்கள் தொடர்ந்து ஜீவிப்பதற்கே, காஷ்மீர் மக்களின் ஆதரவை அல்ல—மாறாக, இந்திய இராணுவத்தினரின் ஆதரவை எதிர்பார்த்துக்கிடக்கின்றனர்

"நிலைமை இப்படி இருக்கும்போது, இந்தியாவின் ஒரு பகுதியாகவே காஷ்மீர் இருக்கவேண்டுமெனக் காஷ்மீர் மக்கள் தீர்மானித்துவிட்டதாக எப்படிக் கூற முடியும்?"—என்றெல்லாம், ரஷ்யத் தலைவர்களுக்குப் பதில் தந்திருக்கிறார், பாகிஸ்தான் பிரதமர் முகம்மது அலி.

"சோவியத் தலைவர்கள் 'காஷ்மீர் விவகாரத்திற்குப் பரிகாரம் அங்கு, சுதந்திரமான நேர்மையான வாக்கெடுப்பு நடத்துவதே' என்று திட்டவட்டமாகத் தீர்ப்பளித்திருக்கும் ஐ நா பாதுகாப்புச் சபையில் ரஷ்யா அங்கம் வகிக்கிறது என்பதையே மறந்துவிட்டார்கள் போலும்! இந்தியாவில் தரப்பட்ட பெரும் உபசாரத்திற்கு கைம்மாறு செய்வதற்காக எல்லா ராஜாங்க மரபுகளையும் தகர்த்துவிட்டிருக்கின்றனர்" என்று பாகிஸ்தான் வானொலி கண்டனம் தெரிவித்திருக்கிறது.

இந்தியப் பாராளுமன்றத்திலும் ரஷ்யத் தலைவர்களின் பேச்சு காரசாரமான விவாதத்திற்கு ஆட்பட்டிருக்கிறது.

வெளிநாட்டுத் தலைவர்கள் வந்துபோனதற்காகும் செலவுகளுக்கான உபமானியக் கோரிக்கை ஒன்றின்மீது நடைபெற்ற விவாதத்தின்போது, சில உறுப்பினர்கள், ரஷ்யத் தலைவர்கள், சிக்கல் மிகுந்த சில விவகாரங்களைப் பற்றிப் பேசியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தனர்.

குருஷ்சேவ் கூறியதின் எதிரொலி

பர்மிய மொழி இதழின் மறுப்புரை

ரங்கூன், டிச. 8—

"முதலாளித்துவ நாடுகளிலுள்ள பத்திரிகை எழுத்தாளர்கள் ரஷ்யாவைப் பற்றி நல்லது எதுவும் எழுதத் துணியாத 'அடிமை'கள்—என்று, குருஷ்சேவ் சாட்டிய 'அபாண்டமான பழி,' நகைக்கத்தக்கது"—என்று பர்மிய மொழிப் பத்திரிகை 'டிரிபியூன்' கூறுகிறது.

'உண்மையாகவே அடிமையான பத்திரிகை எழுத்தாளர் யார்?' என்ற தலைப்பில் அப்பத்திரிகையின் தலையங்கம் கூறுவதாவது:—

"முதலாளித்துவ நாடுகளிலுள்ள பத்திரிகை எழுத்தாளர்கள் அடிமைகள் என்றும், இந்தப் பத்திரிகை எழுத்தாளர்கள் ரஷ்யாவைப் பற்றி நல்லது எதுவும் எழுதத் துணியார்கள் என்றும் குருஷ்சேவ் சாட்டிய ஒரு அபாண்டமான பழியை நாம் சகித்துக்கொண்டிருக்க முடியாது.

"இது நகைக்கத்தக்க ஒரு குற்றச்சாட்டு; அது, திருடன் ஒருவன், மற்றவர்களைத் திருடர் என்பது போன்றிருக்கிறது.

"பர்மா ஒரு முதலாளித்துவ நாடல்ல; ஆயினும் இங்குள்ள பத்திரிகை எழுத்தாளர்கள் சுதந்திரமாய் எழுத முடிவது போலவே, முதலாளித்துவ நாடுகளிலுள்ள பத்திரிகை எழுத்தாளர்களும் சுதந்திரமாய் எழுத முடியும். சட்ட வரம்புக்கு உட்பட்டு, அவர்கள் யாரையும் குறைகூறலாம்; அரசாங்கத்தையும் குறைகூறலாம்.

"நாம் எவ்வகையில் நோக்கினாலும், உண்மையாகவே அடிமைப் பத்திரிகை எழுத்தாளர்கள், ரஷ்யப் பத்திரிகை எழுத்தாளர்களும், ரஷ்யப் பத்திரிகைகளுமே!

"ஒவ்வொரு நாளும் அவர்கள் குருஷ்சேவ் போன்ற ஆட்களை 'மகிழ்விக்க' வேண்டியதாயிருக்கிறது. குருஷ்சேவ் போன்ற மனிதர்கள் சொல்வதைத்தான் அவர்கள் வெளியிட வேண்டும்; கம்யூனிஸ்டு நாட்டுப் பத்திரிகைகளும், பாசிச நாட்டுப் பத்திரிகைகளும் ஒன்றே; கட்சி மனிதர்கள்தான் பத்திரிகைகளை நடத்த முடியும். ஒரு பத்திரிகையும் அரசாங்கத்தைக் குறைகூற முடியாது; பத்திரிகைகளுக்கு அரசாங்கம் பண உதவி வழங்குகிறது—அல்லது எல்லாப் பத்திரிகைகளையும் பணங்கொடுத்து அடிமையாக்கிவிடுகிறது; எனவே, உண்மையில் அடிமைகள் அந்நாடுகளின் பத்திரிகைக்காரர்களே; தனிப்பட்டவருக்குச் சொந்தமான பத்திரிகை ஒன்றுகூட அங்கு கிடையாது. அப்படி ஏதும் இருக்குமானால், எமக்கு அதை குருஷ்சேவ் சுட்டிக்காட்டும்படி விரும்புகிறோம்.

"நிலைமை இப்படி இருக்கும்போது, குருஷ்சேவ் சொன்னது கைக்கிடமானதாகும்."

இலங்கை ஜனநாயகக் காங்கிரசில் பிளவு

இயக்கம் இரண்டு கூறுகளாகும்

கொழும்பு, டிச. 11—

இலங்கை ஜனநாயகக் காங்கிரசில் பிளவு பெரிதாகிவருவதாகத் தெரிகிறது.

காங்கிரசில் அகில இலங்கைக் குழு, இப்போதுள்ள செயற்குழுவை நீக்கிவிட்டுப் புதிய நிர்வாகிகளைத் தேர்ந்தெடுத்திருக்கிறது.

இந்தக் கூட்டத்தை ஏற்பாடு செய்தவர்கள், இப்போதைய தலைவரான அஜீஸ் அவர்களை ஆதரிக்கும் கோஷ்டியினராவர்.

'இந்தக் கூட்டம் சட்ட விரோதமானது' என்று காங்கிரசின் முன்னாள் தலைவரான எஸ். தொண்டமானை ஆதரிக்கும் கோஷ்டியினர் கூறியுள்ளனர்.

இந்த இரண்டு கோஷ்டிகளிடையேயும் ஏற்பட்டுவரும் பிளவு, சீக்கிரமே இரு இயக்கங்களாகக் காங்கிரசைப் பிளந்துவிடும் என்று பார்வையாளர்கள் கருதுகின்றனர்.

தொண்டமான் கோஷ்டியினர், தங்களது எதிர்கால நடவடிக்கைகள் குறித்து ஆலோசிப்பதற்காகத் தனியாகக் கூட்டம் ஒன்று ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

இதற்கிடையில் புதிய நிர்வாகிகள், காங்கிரசின் தலைமைப் பீடத்தைக் கைப்பற்றி, அங்கிருந்த அலமாரியை உடைத்துத் தஸ்தாவேஜுகளை எல்லாம் எடுத்துக் கொண்டுள்ளனராம்.

புயல்சேதம்: சில புள்ளிவிவரம்

இராமநாதபுரம் மாவட்டத்தில் 78 பேர் உயிரிழந்துள்ளதாகவும், 1,18 640 ஏக்கரில் பயிர்கள் சேதமடைந்ததாகவும், 11,500 கால்நடைகள் மாண்டதாகவும் சுமார் 2,000 குளங்கள் உடைந்துவிட்டதாகவும் கலெக்டர் தகவல் தந்துள்ளார்.

தஞ்சை மாவட்டத்தில், நான்கு ஊர்களில் மட்டும் இறந்தவர்களின் எண்ணிக்கை 363 என்று செய்தி ஒன்று கூறுகிறது. பட்டுக்கோட்டை, அறந்தாங்கி தாலுகாக்களில் மட்டும் ஏறக்குறைய ரூ 3 கோடி சேதம் ஏற்பட்டிருக்கக்கூடுமென யூகிக்கப்படுகிறதாம்.

அருப்புக்கோட்டையில் 15 பேர் உயிரிழந்ததாகவும், 5,000 ஏக்கர் புஞ்சை—3,000 ஏக்கர் நஞ்சைப் பயிர் நாசமடைந்துள்ளதாகவும், 13 000 கால்நடைகள் மாண்டதாகவும், 210 குளங்கள் உடைப்பெடுத்துள்ளதாகவும் செய்தி ஒன்று தரப்படுகிறது.

புதுக்கோட்டைப் பகுதி ஆலங்குடி, திருமயம் தாலுகாக்களில் 6 பேர் இறந்தனராம்; 2,000 ஆடு மாடுகள் மடிந்ததென்றும் 35 000 குடிசைகள், 2,177 கட்டிடங்கள் சேதமுற்றன என்றும், 30 000 மரங்களுக்கு மேல் விழுந்துவிட்டன என்றும், நிலுவைப் பயிரிலுள்ள 8,000 ஏக்கர் பாதிக்கப்பட்டுள்ளதென்றும், 26 பெரிய பாசன ஏரிகளிலும், 500 சிறிய பாசனக் குளங்களிலும் உடைப்பு ஏற்பட்டுள்ளதென்றும், பல கிராமங்களில் கண்மாய்கள் உடைந்துவிட்டனவென்றும் கூறப்பட்டுள்ளது.

மானாமதுரையில், 10 மைல் சுற்றளவில் உள்ள கண்மாய்கள் உடைந்துள்ளனவாம்; வீடுவாசல்கள் இடிந்தன—ஆடு, மாடுகள் இறந்தன—வயல்கள் மேடிட்டன பள்ளமாயின—பயிர்கள், தானியங்கள் கெட்டுவிட்டன என்று தகவல் தரப்பட்டுள்ளது.

கும்பகோணம் தாலுகா கடலங்குடி கிராமத்தில் 30,000 வாழை மரங்கள் சாய்ந்துவிட்டனவாம்; 6 வேலி நஞ்சை நிலங்களின் பயிர் தண்ணீரில் மூழ்கிப் பாழாகிவிட்டதாம்.

திருச்சி மாவட்டத்தில் 15 பேர் மாண்டனரெனத் தகவல்கள் கூறுகின்றன.

தஞ்சை—பேராவூரணியில் 10,000 மூட்டை அரிசியும், 12000 மூட்டை நெல்லும் சேதமடைந்துள்ளதாம்.

கழகத் தோழர்கள் அறிவிக்கும் செய்தி

கட்டிமேடு, குருவிக்கரம்பை, கீரமங்கலம், பரமக்குடி போன்ற பகுதிகளிலிருந்து, கழகத் தோழர்கள் அனுப்பியுள்ள செய்திகளில், சேதம் பற்றி தெரிவிக்கும் நிலை திடுக்கிடத்தக்கதாயுள்ளது. நிவாரணப் பணியில், அப்பகுதியில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

புயலால் பாதிக்கப்பட்டுள்ள 4 மாவட்டங்களுக்குக் குடியமைப்பு வசதிகளும், நிவாரணமும் அளிப்பதற்குச் சென்னை சர்க்கார் 8 அம்சங்கள் திட்டமொன்றைத் தயாரித்துள்ளனா.

அந்த நான்கு மாவட்டங்களிலுள்ள கெஜட் பதிவில்லாத ஊழியர்களுக்கு 2 மாதச் சம்பளத்தை முன்பணமாகக் கொடுப்பதற்கு சர்க்கார் அனுமதியளித்துள்ளனர்; அதற்கு வட்டி கிடையாது; 24 தவணைகளுக்குள் அத்தொகை வசூலிக்கப்படும்.

புயல் நிவாரண உதவி பெருகிக்கொண்டே உள்ளது; பல துறையிலுமுள்ளவர்கள் நிதி திரட்டுவதற்கு முயன்றுள்ளதால், நிதியின் அளவை குறிப்பிட்டுக் கூறுவதற்கு இன்றைய நிலையில் இயலாது.

ரூ. 50,000: சவூதி அரேபிய அரசர் நன்கொடை

புயலால் பாதிக்கப்பட்ட தென்னாட்டு மக்களின் உடனடியான

தஞ்சை மாவட்ட தி. மு. கழகக் கிளைச் செயலாளர்களுக்கு

"பொதுச்செயலாளர் அறிக்கைக்கு இணங்க நமது மாவட்டத்திலும் உறுப்பினர்கள் சேர்க்கும் பணியில் கிளைச் செயலாளர்கள் உடனடியாக ஈடுபட வேண்டுகிறேன். ஏற்கனவே மாவட்டக் கழகத்துடன் இணைந்திருந்த கிளைகளுக்கு, முன்னர் சேர்ந்திருந்த உறுப்பினர்கள் எண்ணிக்கைக்கு, விண்ணப்பத் தாள்கள் அனுப்பப்பட்டிருக்கின்றன. அதிகத் தேவைக்கு எழுதிப் பெற்றுக்கொள்க.

"புயல் சேதம் காரணமாக வேதனைக்கு உள்ளாகியும் நிலைமை சீர்படாதவுமான திருத்துறைப்பூண்டி, மன்னார்குடி, ஒரத்தநாடு, அறந்தாங்கி, பட்டுக்கோட்டை வட்டங்களுக்கு இன்னும் விண்ணப்பத் தாள்கள் அனுப்பப்படவில்லை. நிலைமை சீர்ப்பட்ட பின்னரே இந்த வட்டங்களுக்கு அனுப்பப்படும். அதுவரை அவ்வட்டத் தோழர்கள் புயல், வெள்ளச் சேத நிவாரண வேலையில் ஈடுபடுவார்களாக.

"புதிதாக உறுப்பினர்கள் சேர்க்கவும், கிளைகள் துவங்கவும் முயற்சிக்கிற கழக ஆதரவாளர்கள், அருகாமையில் கழகப் பணியில் ஈடுபாடு கொண்டிருக்கிற தக்கவர்கள் மூலம் எழுதிப் பெற்று ஆவன செய்வார்களாக.

"நம் மாவட்டத்தில் உறுப்பினர்கள் சேர்க்கிற பணி உச்சத்திலிருக்க வேண்டுமென்றும், எவ்வளவு கூடுதலாகச் சேர்க்க இயலுமோ அவ்வளவு சேர்க்க வேண்டுமென்றும் வேண்டிக்கொள்கிறேன். 1—12—55-க்கு முன்னால் சேர்க்கப்பட்டு மாவட்டக் கழகத்துடன் இணைப்புக் கொண்ட எந்த உறுப்பினரும் கடந்த கால உறுப்பினராகத்தான் கருதப்படுவர். அவர்கள் மீண்டும் டிசம்பர்—ஜனவரியில் தனியாகக் கட்டணம் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவேண்டும்"

என்று, தஞ்சை மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் என். எஸ் இளங்கோ அறிவிக்கிறார்.

நிவாரணத்துக்கென, இந்தியா வந்துள்ள சவூதி அரேபிய மன்னர் ரூ. 50,000 அன்பளிப்பாகத் தந்ததுடன், அனுதாபமும்தெரிவித்துள்ளார்.

'நிவாரண வேலைக்குச் செலவு என்ன ஆகும் என்பதை இப்

சேலம் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு வேண்டுகோள்

"கடும் புயல், மழையினால் பாதிக்கப்பட்டு சொல்லொணாத் துன்பத்திற்கு ஆளாகியிருக்கும், தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களிலுள்ள மக்களுக்கு உணவு, உடை, உறையுள்களுக்கு வேண்டிய பணம், பொருள்கள் ஆகியவற்றைத் திரட்டி உரியவர் மூலம் அனுப்பி வைக்குமாறு நம் மாவட்டத்திலுள்ள தி. மு. கழகக் கிளைகளும் தோழர்களும் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"பொதுச்செயலாளர் அவர்களது அறிக்கைப்படி, தி. மு. கழக உறுப்பினர்கள் பதிவு செய்யும் விண்ணப்பத் தாள்களை, 'தோழர் ப. இராமலிங்கம், துணைச்செயலாளர், சேலம் மாவட்ட தி. மு. கழகம், குள்ளம்பட்டி (அஞ்சல்) இடப்பாடி (வழி), சேலம் மாவட்டம்' என்ற முகவரிக்கு எழுதிப் பெற்றுக்கொள்ளுமாறு சம்பந்தப்பட்டவர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

"மாவட்டத்திலிருந்து பெற்றுக்கொண்ட விண்ணப்பத் தாள்களை வேறு கிளைகளுக்கோ, கிளைகளைப் புதிதாகத் தோற்றுவிக்கவிருக்கும் பொறுப்பாளர்களுக்கோ கொடுக்க வேண்டாம் எனக் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். எல்லோரும் மாவட்டக் கழகத்திலிருந்து நேரடியாகப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

"உறுப்பினர்கள் சேர்த்த விவரத்தையும், அதற்குண்டான கட்டணத்தை அனுப்பியது பற்றிய விவரத்தையும் மாவட்டக் கழகத்திற்குத் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்"

என்று, சேலம் மாவட்ட தி. மு கழகத் துணைச் செயலாளர் தோழர் ப. இராமலிங்கம் கேட்டுக்கொள்கிறார்.

பொழுது நிர்ணயிக்க முடியாது' என்று, சென்னை திரும்பி வந்துள்ள முதலமைச்சர் காமராசர் கூறியுள்ளார்.

மூன்று கிராமங்கள் எங்கே?

இராமநாதபுரம் மாவட்டத்திலுள்ள இராசசிங்கமங்கலம் ஏரியின் உடைப்பால் என்ன நிலை ஏற்பட்டுள்ளது என்பதை அறிய இயலாத நிலை ஏற்பட்டுள்ளது; ஏரியை ஒட்டித் தீவுகள் போலிருந்த மூன்று கிராமங்கள் வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டிருக்கலாம்; அக்கிராமத்தின் மக்கள் தொகை

நாஞ்சில் மாவட்ட தி. மு. கழகத் தோழர்களுக்கு

"நாஞ்சில் மாவட்டத்திலுள்ள சிற்றூர், பேரூர், நகரம் முதலிய இடங்களில் இன்றிலிருந்து $1\frac{1}{2}$ மாதத்திற்குள் தி. மு. கழகக் கிளைகள் உள்ள இடத்திலுள்ள உறுப்பினர்கள், தங்கள் உறுப்பினர் பதவியைப் புதுப்பித்து, தம்மை தி. மு. கழக உறுப்பினராகத் தகுதிப்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும், கழகம் இதுவரையிலும் அமைக்கப்படாத இடங்களில், மாவட்டக் கழகத்தின் அனுமதி பெற்றுக் கழகங்கள் அமைக்க வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். எப்படி இந்த அமைப்பு முறைகளில் நடந்துகொள்ள வேண்டுமென்று, வடசேரி தி. மு. கழக அலுவலகத்தில் 16-12-55 மாலை 4 மணிக்கு நடைபெற இருக்கும் கூட்டத்தில் ஆராயப்படும்.

"எனவே, கிளைக் கழகச் செயலாளர்கள், துணைச் செயலாளர்கள், பொருளாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள், புதிய கழகம் அமைக்க விரும்பும் தோழர்கள் ஆகியோர் அவசியம் வருகைதந்து, தங்களது கருத்துரைகளை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்று, உறுப்பினர் பதிவு விண்ணப்பத் தாள்களும் கிளைக் கழகங்களுக்கு வழங்கப்படும்,"

என்று, நாஞ்சில் மாவட்ட தி. மு கழகச் செயலாளர் தோழர் வி எம். ஜான் அறிவிக்கிறார்.

எவ்வளவு என்பது தெரியவில்லை. டெபுடி கலெக்டர் அங்கு விரைந்துள்ளார்; அவரிடமிருந்து அறிக்கையை எதிர்பார்க்கிறேன்' என அவர் முக்கியமாகக் குறிப்பிட்டுள்ளார்.

தோப்புத்துறையில் எதுவும் தப்பவில்லையாம்

'தஞ்சை மாவட்டம் தோப்புத்துறை, அவ்வட்டத்தின் எல்லாப் பகுதிகளையும்விட கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது; எல்லா வீடுகளும்தரைமட்டமாகிவிட்டன; செங்கல் கட்டிடங்கள்கூட தப்பவில்லை; ஒரே அழிவு மயந்தான். தோப்புத்துறை தவிர, மற்ற பகுதிகளைப் பொறுத்த வரையில், இராமநாதபுரம் மாவட்டமும், தஞ்சை மாவட்டமும் ஒரே அளவில் பாதிக்கப்பட்டுள்ளன,' என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

★

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம்

கடலூரில் சர்வ கட்சிக் கூட்டம்

10—12—55 காலை 10 மணிக்கு கடலூர் பாடலி டாக்கீஸில் தோழர் பி. தணிகாசலம் எம். சி., (காங்) தலைமையில், புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து, சர்வகட்சிக் கூட்டம் ஒன்று நடைபெற்றது. தோழர்கள் கி கோவிந்தராசன் (தி.மு.க.), பி வி. பண்டரிநாதன் (சோஷ), மு சீனுவாசன் (தி. மு க), பி. தணிகாசலம் (காங்), முத்தரங்கம் (மாணவர் கழகம்) ஆகியோர் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அனுதாபம் தெரிவித்து அவர்களுக்கு உதவி செய்ய வேண்டிய கடமையைப் பற்றிப் பேசினர். புயல் நிவாரணக் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்காக நகர தி. மு கழகச் சார்பில் ரூ 25-ம், பூக்கடை ஆறுமுகம் ரூ. 10-ம், பி. தணிகாசலம் (காங்) ரூ 5-ம் நன்கொடை தரப்பட்டது

செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழக உறுப்பினர்களுக்கு

"உறுப்பினர் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் அனைவருக்கும் அனுப்பப்பட்டுள்ளது. சிறிதும் தாமதமில்லாமல் உறுப்பினர் சேர்க்கும் பணியில் ஈடுபட வேண்டுகிறேன். நான் 15—12—55-ல், டில்லியில் நடைபெறும் சர்வதேசத் தொழிற் கண்காட்சியைக் காணச் செல்கிறேன். 1—1—56-ல்தான் காஞ்சி வருவேன். ஆயினும், தங்களுக்கு மேலும் தேவைப்படும் உறுப்பினர் சேர்க்கும் தாள்களுக்கு எழுதவும். அவைகளை உடனுக்குடன் அனுப்பமட்டும் தக்க ஏற்பாடு செய்திருக்கின்றேன் என்பதை அறிவித்துக்கொள்கிறேன். மற்றப்படி கழக சம்பந்தப்பட்ட விபரங்களை 1—1—56-க்குப் பிறகு எழுத வேண்டுகிறேன்,"

என்று, செங்கற்பட்டு மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. டி எஸ் மணி அறிவிக்கிறார்.

பம்பாயில் புயல் நிவாரணக் குழு அமைப்பு

8—12—55 மாலை 7 மணிக்கு, பம்பாயிலுள்ள ஜனநாயக வாலிபர் சங்க அறையில், மேற்படி சங்கத் தலைவர் தோழர் கே. எஸ் கணேசன் தலைமையில் நடைபெற்ற பல கட்சிப் பிரதிநிதிகளும் அடங்கிய கூட்டம் ஒன்றில், தஞ்சை, இராமநாதபுரம், திருச்சி ஆகிய மாவட்டங்களில் புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிதி திரட்டி உதவும் வகையில் 'புயல் நிவாரணக்குழு—பம்பாய்' என்ற பெயரில் குழு ஒன்று அமைக்கப்பட்டது.

சென்னை மாநில எயிடட் பள்ளிகளுக்குச் சர்க்கார் நஷ்ட ஈடு

சங்கப் பொதுச்செயலாளர் தகவல்

19—11—55 அன்று வேலூரில் நடந்த 2-வது மாநில மாநாட்டின் தீர்மானங்களின்படி, மாநில சங்கத்தின் தலைவர், செயலாளர் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் கலந்த தூதுக் குழுவினர், நவம்பர் 21, 22-ல், சென்னையில் முதலமைச்சர் காமராசர் அவர்களையும், கல்வி இலாகா காரியதரிசி அவர்களையும் பேட்டி கண்டனர்.

அந்தப் பேட்டியில், நஷ்டஈடு கொடுக்கப்படாமையால் எயிடட் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியும், மாநாட்டில் தீர்மானிக்கப்பட்ட தீர்மானங்களும் விளக்கப்பட்டன. உடனடியாக அரசாங்கத்தார் எயிடட் பள்ளிகளுக்கு நஷ்டஈட்டைக் கொடுக்க, 6 மாத காலமாகியும் இன்னும் தயங்குவார்களானால், எயிடட் பாடசாலைகளை மூடிவிட வேண்டிய நெருக்கடி ஏற்படுமென்றும் எடுத்துக்காட்டப்பட்டது.

இந்தப் பேட்டியின் விளைவாக அரசாங்கத்தார் உடனடியாகக் கல்வி இலாகா டைரக்டரை, எயிடட் பள்ளிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடியைத் தீர்க்க, உடனே நஷ்டஈடு கொடுக்கும்படி உத்தரவிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அந்த உத்தரவின் விளைவாக, 23-ந் தேதி கல்வி இலாகா டைரக்டர் உத்தரவு ஒன்றை எல்லாக் கல்வி அதிகாரிகளுக்கும் அனுப்பி, உடனடியாக நஷ்டஈட்டைக் கொடுக்கும்படி உத்தரவிட்டிருக்கிறார்.

பிறப்பு

4—12—55-ல், சென்னை-மண்ணடி. எண் 82, சவரிமுத்து தெருவிலிருக்கும் தோழர் டி. சண்முகம் அவர்களின் துணைவியார் தோழியர் முத்துலட்சுமி அம்மாள் ஒரு பெண் மகவுக்குத் தாயானார்.

****

பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைப்பு

பெரும் புயல் வீசியதன் காரணமாகத் தஞ்சை—திருச்சி—மதுரை—இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்கள் பெருங்கேடுகளுக்கு உள்ளாகியிருப்பதாலும், கிளைக் கழகங்களை நிவாரண வேலைகளில் ஈடுபடுத்த வேண்டியிருப்பதாலும், புயலாலும், மழையாலும் பாதிக்கப்பட்ட பகுதிகளைப் பார்வையிடச் செல்ல வேண்டியிருப்பதாலும் 18—12—55 ஞாயிறன்று குடந்தையில் நடக்க இருந்த பொதுக்குழுக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது. அடுத்து பொதுக்குழுக் கூட்டம் கூட்டும் விபரத்திற்குப் பின்னால் அறிக்கை வெளியிடப்படும்.

'அறிவகம்,'
சென்னை—13
7-12-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம்: தோழர்கள் மும்முரம்

மத்திய சர்க்காரின் 'தாராள' உதவி?

சென்னை, டிச. 13—

மழையாலும், புயலாலும் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில், நிலவரி வஜா வழங்குவது பற்றியப் பொதுவான விதிகள் தயாரிக்கப்பட்டு விட்டதாக நிலவரி இலாகா அமைச்சர் மாணிக்கவேலர் அறிவித்துள்ளார்.

ரொக்க உதவி

குடிசைகளை இழந்தவர்களுக்கு ரூ 30 வீதமும், பணிபுரிந்து வருமானம் பெற்றுவந்த குடும்பத் தலைவர்களை இழந்துள்ள குடும்பங்களுக்கு ரூ. 50 வீதமும் ரொக்கமாகக் கொடுக்கப்பட்டு வருவதாகவும், இந்தப் பிரிவில் வராமல் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்குக் கடன் தரப்படுமென்றும் அவர் தெரிவித்தார்.

பாசன ஏரிகள் மராமத்து

வட ஆற்காடு, கோவை மாவட்டங்களைச் சேர்ந்த சிறு நீர்ப்பாசன சிப்பந்திகள், வெள்ளம்—புயலால் பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளில் பாசன ஏரிகளை மராமத்து செய்வதில் ஈடுபட்டுள்ளனர். உடைந்த ஏரியின் கரைகளைப் பழுது பார்ப்பது அவர்களுடைய முதல் கடமையாக இருக்கும்.

200 ஏக்கர் பரப்பளவுள்ளப் பயிர்களுக்குப் பாசன வசதி அளிக்கக் கூடிய ஏரிகளை மராமத்து இலாகாவினர் நேரிடையாக மராமத்து செய்து வருகின்றனர்.

மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் வெள்ளத்தால் சேதமடைந்த பாதைகளைப் பழுது பார்ப்பதற்காகச் சென்னை சர்க்கார் ரூ. 4 இலட்சம் அனுமதித்துள்ளனர்.

நிவாரண நிதிப் பங்கீடு

இந்தியப் பிரதமரின் தேசிய நிவாரண நிதியிலிருந்து அளிக்கப்பட்டுள்ள ரூ. 1½ இலட்சத்தில், ரூ. 50,000 இராமநாதபுரம் மாவட்டத்திற்கும், ரூ. 50,000 தஞ்சை மாவட்டத்திற்கும், ரூ. 20,000 திருச்சி மாவட்டத்திற்கும், ரூ. 10,000 மதுரை மாவட்டத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள ரூ 20,000 பொதுப் புயல் நிவாரண நிதிகளுடன் சேர்க்கப்படுகிறது.

உணவுப் பொருள்களுடன் விசேட இரயில் புறப்பாடு

புயலால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணம் அளிக்கும் பொருட்டு ஒரு விசேட இரயில் சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றுள்ளது. இந்த இரயிலில் 60 'வாகன்கள்' இருந்தன; மொத்தமாக 700 டன் உணவு—அரிசி, சோளம், பால் பவுடர், நெய், வெண்ணெய், எலுமிச்சம் பழ ரசம், பதம் செய்யப்பட்ட உணவு வகைகளை அவை ஏற்றிச் சென்றுள்ளன. இவைகள் மட்டுமின்றி, 300 போர்வைகள், 200 ஜதை வேட்டிகள், 100 புடவைகளும் இவற்றுடன் செல்கின்றன.

இவ்விசேட இரயில், தஞ்சை, திருச்சி மதுரை இரயில்வே நிலயங்களில் நின்று, அப்பகுதிக்கான நிவாரணப் பொருட்களை இறக்கிச் செல்லும்.

மத்திய ஆட்சியினரும் முன்வருகின்றனராம்

ரூ. 60 இலட்சம் மதிப்புள்ள 2,500 டன் உணவு வகைகளை நான்கு விசேட இரயில்கள் மூலம் அனுப்புவதற்கு மத்திய சர்க்கார் முடிவு செய்துள்ளனராம். இதில் இந்திய சர்க்காரின் பங்கு 1,236 டன்கள்தான்—1,000 டன் அரிசி, 236 டன் சோளம் தானும்! இதர உணவு வகைகள் சமூக சேவா நிறுவனங்களால் நன்கொடையாக அளிக்கப்பட்டவையாகும். ரூ 10 இலட்சம் மதிப்புள்ள சாமான்களை கத்தோலிக்க உதவி சர்வீஸ் பரிசாகக் கொடுத்துள்ளதாம்.

பாதிக்கப்பட்டுள்ள பகுதிகளுக்கு தினம் ஒரு இரயில் வீதம் செல்லும் இவ்விசேட உணவு இரயிலில் அனுப்பப்படும் சாமான்களின் விபரமும் தரப்பட்டுள்ளது:—அரிசி 1,000 டன்; சோளம் 236 டன்; பால் பவுடர் 320 டன்; நெய் 358 டன்; வனஸ்பதி 150 டன்; அமெரிக்க நெய் 24 டன்; பாலடை 25 டன்; எலுமிச்சம் பழம் ரசம் 1¼ டன் — இவற்றின் மொத்த மதிப்புத்தான் ரூ. 60 இலட்சமாகும்.

நிவாரண நிதி

வடநாட்டினரிடமிருந்து தனிப்பட்ட முறையில் எவ்வித நிதியும் கிடைக்கவில்லையாயினும், தங்கள் பகுதி மக்களின் சீரழிவைக் கண்டு தேம்பும் பிற பகுதி மக்கள், தங்களாலியன்ற அளவுக்கு நிதி தந்து வருகின்றனர்; கழகங்கள், மன்றங்கள், நிறுவனங்கள், சமூக சேவா நிலயங்கள் ஆகியவைகளின் மூலமும், தனிப்பட்டக் குழுக்கள் அமைத்து அதன் மூலமும் ஏராளமான தோழர்கள் ஈடுபட்டு நிதி திரட்டும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழகத்தின் சினிமா நடிகர்கள் நிதி திரட்டும் பணியில் முழு மூச்சுடன் ஈடுபட்டுள்ளனர். கணிசமான அளவுக்கு நிதி திரட்டியுமுள்ளனர்.

திருக்குறள் வகுப்பு

14—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை-புரசைபாக்கம், எண் 100, வேளாளர் தெரு, தொண்டை மண்டல வேளாளர் சங்கத்தில், தோழர் க. அன்பழகன் அவர்கள் திருக்குறள் வகுப்பு நடத்துவார்.

நெல்லை மாவட்ட தி. மு. க. கிளைகளுக்கு

"தி. மு. கழகத்தில் உறுப்பினர்களைச் சேர்க்கும், படிவங்களை கிளைகளுக்கு அனுப்பியுள்ளேன். அனுப்பியப் படிவங்களுக்கு மேல் அதிகம் தேவைப்பட்டால், அப்படிவங்களை நிரப்பி தலைமை நிலயத்திற்கு அனுப்பிவிட்டு மீண்டும் எனக்கு எழுதவும். உறுப்பினர் சேர்ப்பது, பொதுச் செயலாளர் அவர்களின் அறிக்கைப்படி இருக்க வேண்டும்.

"உறுப்பினர்கள் சேர்த்தானவுடன் படிவமும் அதற்குரிய பணமும், உடன் தலைமை நிலயத்திற்கு அனுப்பிவைக்கப்பட வேண்டும்.

"உறுப்பினராவதற்குப் பணம் கொடுத்தத் தோழர்கள் 20 நாளைக்குள்ளாகத் தலைமை நிலயத்திலிருந்து, இரசீது பெற்றுக்கொள்ளாவிட்டால் உடனே எனக்குத் தகவல் கொடுக்கவேண்டும்; ஏனெனில் இரசீது வராவிட்டால், உறுப்பினராகப் பதிவு செய்யப்பட்ட படிவமும், பணமும் தலைமை நிலயத்திற்குப் போய்ச் சேரவில்லை என்றே பொருள்படும். எனவேகிளைகள்பொறுப்பை உணர்ந்து உடனுக்குடன் ஆவன செய்ய வேண்டுகிறேன்."

என்று நெல்லை மாவட்ட தி. மு. கழகச் செயலாளர் தோழர் கே. வி. கே. சாமி கேட்டுக்கொள்கிறார்.

'நமக்குத் துன்பம் வந்தால் நமக்குத்தான் உடல் பதைக்கும்'

'வடவருக்கு அனுதாபம் பிறக்குமா?'

சென்னைக் கூட்டத்தில் கண்ணதாசன்

சென்னை, டிச. 13—

"இங்குள்ளவருக்குத் துன்பம் என்றால்—இங்குள்ள மக்கள் வருந்துகிறார்கள் என்றால், சென்னை மக்களுக்குத்தான் உடல் பதை பதைக்கும். புயலின் கொடுமையால் வாடித் தவிப்போரைக் காணக் காமராசர் விமானம் மூலம் பறந்தாரென்றால் அவர் நம் இனத்தவர்; 'தான் ஆடாவிட்டாலும் தன் சதை ஆடும்';—சதையாடிற்று. வடநாட்டவருக்கு எதுவும் ஆடவில்லை—நம்மைப் பற்றி சிறிதும் கவலைப்படவில்லை. காரணம் அவர்கள் வேறு—நாம் வேறு. 'தென்னாடு கடல் கொள்ளப்பட்டது' என்று செய்தி வந்தால்கூட, 'இமயத்திற்கு வராமல் போனால் நல்லதே' என்று கருதுவார்களே தவிர, நம்மீது அனுதாபம் பிறக்க அவர்களுக்கு நியாயமில்லை. நம் வீட்டில் இழவு என்றால் நாம்தான் கண்ணீர் வடிக்கவேண்டுமே ஒழிய பக்கத்து வீட்டுக்காரனுக்கு என்ன வந்தது? ஆகவே, நாம் வேறு—நம் இனம் வேறு; வடநாட்டார் வேறு—அவர்கள் இனம் வேறு. காமராசர் விமானம் மூலம் பறந்து பார்த்தார் என்றால் வேறு யார் பார்க்க இருக்கிறார்கள்?"

—என்று, 11—12—55 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை கல்லறை மைதானத்தில் நடைபெற்றப் பொதுக் கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் பேசினார்.

கூட்டத்திற்குத் தோழர், ஏ. எம். முத்தையா தலைமை வகித்தார். தோழர்கள் கோ. வெற்றிவீரன், ஆடலழகன் ஆகியோர் பேசிய பின்னர், தோழர் கண்ணதாசன் தொடர்ந்து பேசியதாவது:—

"'மத்திய சர்க்காரிடமிருந்து பிரிந்து விடு' என்றுகூட நிதியமைச்சரைக் கேட்கவில்லை 'போராடிப் பணத்தைப் பெறுங்கள்' என்றுதான் கேட்கிறோம். சேரு ரூ 1½ இலட்சம் தந்தார் என்கிறார் சுப்பிரமணியம். புயலின் கொடுமையால் தவித்திடும் மக்களுக்கு அது எந்த மூலை?

"கையிலிருந்த வேட்டியை இழந்தவன் அதைப் பெறுவதுதான் நியாயம்; பல கோடி ரூபாய் கிடைத்தால் ஒழிய முழுப் பஞ்சத்தையும் ஒழிக்க முடியாது; இங்கிருந்து போகின்ற எத்தனையோ வரியில் ஒரு வரியை ஒதுக்கி, அதை, தவித்திடும் மக்களுக்கு அனுப்ப வேண்டும்; வடநாட்டில் வெள்ளம் வந்தபோது இங்குள்ள மந்திரிகள் எப்படிப் பதைத்தனர், தந்தியடித்தனர்? இன்று நமக்கு ஏற்பட்டுள்ள நிலைமையைக் கண்டு ஒரு வடநாட்டான் அனுதாபமாவது அனுப்பினான் என்று சொல்ல முடியுமா? பஞ்சாபில் வெள்ளம் வந்தபோது வாரிக்கொடுக்க முடிந்தது—ஆனால் தென்னாட்டு மக்களுக்கு உதவ எதுவுமில்லை. நாம் துடிக்கிறோம்; வடநாட்டவன் ஏன் துடிக்கப் போகிறான்? இந்த நிலைக்கு 'ஏக இந்தியா' என்று ஏன் பெயர்? நிதியமைச்சர் சுப்பிரமணியத்திற்கு நாம் சொல்வதெல்லாம், இந்தக் கஷ்டத்தைப் போக்க நம் போன்றவராலும் முடியாது—சென்னை சர்க்காராலும் முடியாது. அதைத் துடைக்கும் சகதி மத்திய சர்க்காரிடமே உள்ளது. எனவே, நமக்குத் தேவைப்படுகிற பணம் ரூ. 5 கோடிக்குக் குறையாமல், மத்திய சர்க்காரிடமிருந்து வந்தாக வேண்டும்.

"வடநாட்டுக்குப் போகிற வரியை நாங்கள் தரமாட்டோம்—என்று சொல்லும் நிலைமையை நாட்டு மக்களுக்கு ஏற்படுத்தாதீர்கள் என்று கேட்டுக்கொள்கிறோம்.

"பஞ்சாபிற்குத் திறந்த கஜானா—வங்காளத்திற்குத் திறந்த கஜானா—உத்திரப் பிரதேசத்திற்குத் திறந்த கஜானா—சென்னைக்குத் திறக்கப்பட வேண்டும்; இல்லையென்றால், சுப்பிரமணியமென்ன—வேறு எவர் வந்தாலும், இந்த நாட்டு மக்களின் சக்தியை அடக்கமுடியாது."

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகத் தோழர்கட்கு

"தஞ்சை, திருச்சி, மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களில் புயலால் பெருநாசம் விளைந்தது குறித்துத் திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம் பெரிதும் வருந்தித் தனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்ளுகின்றது. சென்னை அரசியலார் உடனடி நிவாரண வேலைகளில் ஈடுபடுவது கண்டு பாராட்டுவதுடன், இந்த நிவாரண வேலையை மேலும் விரிவுபடுத்த வேண்டும் என்று சென்னை அரசியலாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது. தி. மா. மு. கழகத்தைச் சார்ந்தவர்கள், ஆங்காங்குத் தங்களாலான எல்லா உதவிகளையும் செய்ய வேண்டும் என்று தி. மா. மு. கழக அமைப்புக் குழு கேட்டுக் கொள்ளுகின்றது,"

என்று, தி. மா. மு. கழக அமைப்பாளர் தோழர் டி. கே. பொன்னுவேலு கேட்டுக்கொள்கிறார்.

எஸ்.ஆர்.எம்.யூ. வேண்டுகோள்

★

"வேதாரண்யம், கோடிக்கரை, தோப்புத்துறை, பட்டுக்கோட்டை, அறந்தாங்கி பகுதியில் இரயில்வே தொழிலாளர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரியவருகிறது. பலருடைய இருப்பிடமே தெரியவில்லை.

"1952-ம் ஆண்டில் புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஆரம்பத்தில் ஏதோ அரசாங்கம் உதவி செய்து, பின்னர் கவனிக்காமல் விடப்பட்டதுபோலில்லாமல் உடனடி உதவிகள் செய்வதுடன், நிலைமை சீர்பட்டவுடன் ஏற்பட்ட நட்ட விவரத்தை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் ஈடுசெய்ய வேண்டுமென ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளுகிறோம்," என்று, தென்பகுதி ரயில்வே மென்ஸ் யூனியன் மத்திய சங்கத் தலைவர் சீ. இராகவானந்தம் கேட்டுக்கொள்கிறார்.

தீண்டாமையைக் கடைப்பிடித்த தொழிலாளி

சென்னையைச் சேர்ந்த க்ஷவரத் தொழிலாளி ஒருவர், தாழ்த்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்த ஒருவருக்கு முக க்ஷவரம் செய்ய மறுத்தார் என்று நீதிமன்றத்தில் தொடரப்பட்டிருந்த வழக்கொன்றில் தீர்ப்பளிக்கையில், நீதிபதி எஸ் ஏ. அய்யாசாமி அவர்கள், இது போன்ற வழக்குகளில் உரிய கடும் தண்டனை விதிக்க வேண்டியதுதான் என்றும், ஆனால், விசாரணையின்போது, எதிரி, அரிசனர் ஒருவருக்கு க்ஷவரம் செய்வதில் தமக்கு எவ்வித ஆட்சேபணையும் கிடையாது என்று குறிப்பிட்டிருப்பதால், எதிரி, தன்னைத் திருத்திக்கொள்வதற்காக வாய்ப்பு அளித்தாக வேண்டும் என்பதால் அடுத்த ஆறுமாத காலத்திற்கு நன்னடத்தை ரூ. 100 ஜாமீனில் விடுதலை செய்வதாகவும் கூறினார்.

பஜனை பாடி சகாக்களை...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்தப் பாடல்களில் இலயித்துவிட்ட சிறைக் காவலாளிகளை ஏமாற்றுவது, தப்பியோடியவர்களுக்கு சுலபமாயிருந்ததாம் சிறைக் காவலாளிகளின் கவனம் எல்லாம் பஜனைப் பாடல்களில் திரும்பியிருந்தபோது, கைதிகள் எளிதில் தங்கள் தப்பியோடும் வேலையைச் செய்துவிட்டிருக்கின்றனர்.

மீண்டும் சூரியகிரகணம்!

சென்னை, டிச. 13—

சென்ற ஜூன் மாதம் 20-ந் தேதி சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த முழு சூரியகிரகணம் பிடித்தது உலக முக்கியத்துவச் செய்தியாக இருந்தது. இப்போது மீண்டும் 14-ந் தேதியன்று கங்கண சூரிய கிரகணம் பிடிக்கப்போகிறது—அதாவது, சூரிய விளிம்பு ஒரு வளையம்போல் தெரிகிற கிரகணம் ஏற்படும். விஞ்ஞான நிதியில் பார்த்தால், ஜூன் கிரகணத்தைப்போல் இது அவ்வளவு முக்கியத்துவம் உள்ளதல்லவாயினும், மின் அணு மண்டல (அயனூஸ்பியர்) ஆராய்ச்சிகையும், ரேடியோ—வான சாத்திர ஆராய்ச்சியையும் நடத்துவதற்கு அது நல்ல வாய்ப்பளிக்கும்.

இக்கிரகணம் இந்தியா முழுவதிலும் பாதி மறைப்பாகத் தெரியும். கார் நிக்கோபார் தீவில் மாத்திரம் பூரண கிரகணமாகத் தோன்றும்.

முன்னைய கிரகணத்தைப் போலவே இந்தக் கிரகணமும் பூமியில் ஒரு குறுகிய பகுதியிலுள்ளவர்களுக்குத்தான் தெரியும்—அதாவது, சந்திரனின் நிழல் விழுகிற பகுதியிலுள்ளவர்களுக்குத் தான் தெரியும். அதற்கு வெளியிலுள்ளவர்களுக்குச் சூரிய பிம்பம் பாதி மறைந்த உருவத்தில்தான் தெரியும். அவ்வாறு மறைந்ததுபோல் வருகிற பிம்பத்தின் அளவும் இடத்துக்கிடம் மாறுபடுகிறது. நிழல் விழுகிற பகுதியிலிருந்து தூரத்தில செல்லச் செல்ல மறைந்திருக்கும் பகுதி குறைந்துகொண்டே இருக்கும். குறிப்பிட்ட வரம்புக்கு அப்பால் சென்றுவிட்டால் கிரகணமே பிடித்ததாகத் தெரியாது; முழு பிம்பமும் தெரியும்.

இந்தக் கிரகணம் ஆப்பிரிக்காவில் தெற்கு லைபீரியன் பாலைவனத்தில் ஆரம்பித்து, சூடான், எதியோப்பியா, சோமாலிலாந்து, இந்து மகா சமுத்திரம், இலங்கை, அந்தமான், தென் பர்மா, தாய்லாந்து, வியட்நாம் ஆகிய பகுதிகளைக் கடந்து பார்மோசா தீவுக்கு அப்பால் போய் முடிகிறது.

இந்து மகா சமுத்திரத்தில்தான் நேர்ப்பாதிப் பகுதி அடங்கிக் கிடக்கிறது. காரோட்டம், ஜிபூதி, கார் நிக்கோபார் தீவு, பாங்காக், ஹாய்னன் ஆகிய இடங்கள் எல்லாம் இப்பகுதியின் மையத்தில் அடங்கிக் கிடக்கின்றன. அங்கே சூரிய கிரகணத்தை வெகு அழகாகக் காணலாம்.

இந்தக் கிரகணம் காலை 11-42 மணிக்கு ஆரம்பிக்கும்; கங்கண நிலைமை 1-42 மணிக்கு ஆரம்பிக்கும்; அது 1-47 மணிக்கு உச்சமாக இருக்கும்; 3-42 மணிக்கு கிரகணம் முடிவடையும்.

திருமணம்

15-12-55 காலை 10 மணிக்கு, நிலக்கோட்டை மணமகன் இல்லத்தில், தோழர் எம். எஸ். பால்ராசு—தோழியர் பாப்பா பதிவுத் திருமணம், தோழர் எஸ். முத்து எம். சி., தலைமையில் நடைபெறும். பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தோழர்கள் சி என். அண்ணாதுரை சி. பி சிற்றரசு, அ பொன்னம்பலனார் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம் ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம் ஏ.